## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண்.345 நாள்: 30.07.2026

**மக்கள் தொகை கணக்கெடுப்பினை முன்னிட்டு சுயகணக்கெடுப்பின் மூலம் இணைய தளத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் தங்களது சுயவிவரங்களை பதிவு செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.**

மக்கள் தொகை கணக்கெடுப்பு – 2027-இன் ஒரு பகுதியாக சுய கணக்கீடு (Self Enumeration) மேற்கொள்ள 17.07.2026 முதல் 31.07.2026 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளநிலையில், சுய கணக்கீடு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இன்று (30.07.2026) பெருநகர சென்னை மாநகராட்சி வளாகத்தில் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தாங்கள் சுய கணக்கீடு செய்ததை உறுதி செய்யும் வகையில், அதற்கான உறுதிப்படுத்தல் திரையைக் கைப்பேசியில் காட்டி, கையை உயர்த்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வில் பங்கேற்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பொதுமக்களும் (31.07.2026)க்குள் மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான சுய கணக்கீட்டை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்போர் சுய கணக்கீடு செய்யும்போது, மாவட்டமாக "சென்னை" என்பதைத் தேர்வு செய்து சரியான விவரங்களை பதிவு செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**